**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 197/2013**

**வாதி தரப்பு சாட்சி–1 பானுமதி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 24.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் 5 ஏக்கர் 5 செண்ட் ஆகும். 5 ஏக்கர் 5 செண்ட் நிலத்தின் நான்கெல்லை விபரம் தெரியுமா என்றால் தெரியவில்லை. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்துவிட்டார்கள். அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தான 5 ஏக்கர் 5 செண்ட் நிலத்தைதான் 1ம் பிரதிவாதி 04.07.1975ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். கிரையம் வாங்கிய விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. யாரிடம் இருந்து எவ்வளவு தொகைக்கு வாங்கினார் என தெரியாது என்றால் சரிதான். முத்துசாமி கவுண்டர் கிரையம் பெற்ற பிறகு மேற்படி சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான், எனது தகப்பனாரும் சேர்ந்து அனுபவம் செய்துவந்தார்.

2) மேற்படி சொத்தை எனது தகப்பனார் அனுபவம் செய்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் தீர்வை ரசீதுகள் வைத்துள்ளேன். 5 ஏக்கர் 5 செண்ட் முழுவதையும் எனது தகப்பனார் அனுபவம் செய்தாரா என்றால் ஆமாம். தாவா சொத்தை தவிர எனது தகப்பனாருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் கூடலூர் கிராமத்தில் இருந்ததா என்றால் இருந்தது. அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனாருக்கும், முத்துசாமி கவுண்டருக்கும் பாகம் பிரிந்ததா என்றால் பிரிக்கப்பட்டது. அவ்வாறு பாகம் பிரிந்து சுமார் 50 வருடம் இருக்குமா என்றால் தெரியவில்லை, எனது தகப்பனார் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். அவர் இன்று நீதிமன்றத்திற்கு

வந்திருக்கிறாரா என்றால் இல்லை. என் தகப்பனாருக்கு பாகம் பிரித்த சொத்துக்களின் பட்டா எண் 1612 என தனியாக பட்டா ஏற்பட்டதா என்றால் தெரியவில்லை. முத்துசாமி கவுண்டர் பெயரில் தனியாக பட்டா ஏற்பட்டதா என்றால் அதுபற்றி தெரியவில்லை.

3) ராசு என்கிற ஆண்டியப்பனும், பழனியப்பனும் எனது பெரியப்பாக்கள். அவர்களுக்கு தனித்தனியாக சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார், 1ம் பிரதிவாதி, ராசு என்கிற ஆண்டியப்பன், பழனியப்பன் ஆகியோர் தனித்தனியாக பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகம் நடந்து சுமார் 50 வருடங்கள் இருக்குமா என்றால் தெரியவில்லை, எனது தகப்பனார் என்னிடம் பாகப்பிரிவினை பற்றி சொன்னதில்லை. எனது தகப்பனார், பெரியப்பாக்களுக்கு பாத்தியப்பட்ட பொதுச்சொத்துக்கள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. மேற்படி சொத்துக்களை பொறுத்து பாகம் பிரிக்கப்படாமல் பொதுவாக உள்ளது என்றால் சரிதான். பொதுச்சொத்துக்களுக்கு தனியாக பட்டா உள்ளதா என்றால் அதுபற்றி தெரியவில்லை. ராசு என்கிற ஆண்டியப்பன், பழனியப்பன் உயிருடன் இருக்கிறார்களா என்றால் இறந்து விட்டார்கள். அவர்களுக்கு வாரிசுகள் இருக்கிறார்கள்.

4) இவ்வழக்கு தாக்கல் செய்த போது மேற்படி நபர்கள் இருந்தார்களா என்றால் பழனியப்பன் மட்டும் இருந்தார். ராசு என்கிற ஆண்டியப்பன் மற்றும் பழனியப்பன் வாரிசுகளுக்கும், எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். சுமூக உறவில்தான் இருக்கிறோம் என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரதிவாதிகளின் பதிலுரையை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி முத்துச்சாமி கவுண்டருக்கு 3 மகன்கள். தாவா சொத்திற்கான பட்டா முத்துச்சாமி கவுண்டர் பெயரில் ஏற்பட்டதால்தான் இவ்வழக்கு தாக்கல் செய்தேன். முத்துச்சாமி கவுண்டர் பெயரில் உள்ள தாவா சொத்திற்கான பட்டாவை ரத்து செய்ய வருவாய்துறையில் மனு கொடுத்தேனா என்றால்

கொடுத்தேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எப்போது மனு கொடுத்தேன் என்றால், சுமார் 2 மாதத்திற்கு முன்பு கொடுத்தேன். மேற்படி மனுவின் நகல் வைத்திருக்கிறேனா என்றால் வைத்திருக்கிறேன்.

5) மேற்படி மனுவிற்கு வட்டாட்சியர் பதில் கொடுத்தாரா என்றால், நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார். மேற்படி விபரத்தை எனது தகப்பனாரிடம் சொன்னாரா என்றால் ஆமாம், நான் போகவில்லை. வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்த விபரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது தகப்பனாருக்குத்தான் தெரியும். என் தகப்பனார் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது அவரும் வந்தாரா என்றால் ஆமாம். தாவா சொத்தில் எனது தகப்பனாருக்கு உரிமை உள்ளதா என்றால் ஆமாம். என் தகப்பனார் என்ன ஆவணம் எழுதியுள்ளார் என்றால், தான செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணம் எழுதும் போது நான் அருகில் இருந்தேனா என்றால் இருந்தேன்.

6) எனக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லும் தான செட்டில்மென்ட் ஆவணத்தில், மேற்படி சொத்துக்கள் தனக்கு பாகத்தில் கிடைத்தது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால், அதுபற்றி தெரியவில்லை. மேற்படி தான செட்டில்மென்ட் ஆவணத்தில் (வா.சா.ஆ.1) நான் கையெழுத்தும், கைரேகையும் செய்துள்ளேனா என்றால் ஆமாம். ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்துக்கள் போட்டுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. பத்திரத்தை யார் எழுதியது என்றால் ஞாபகமில்லை. யார் சாட்சி கையெழுத்து போட்டது என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் எத்தனை வருடமாக பிரச்சினை என்றால், 2013 ல் இருந்துதான் பிரச்சினை. எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்கள் அனைவரும் தனித்தனியாகத்தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

7) நான் பிறந்ததில் இருந்தே தனித்தனியாகத்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் வசிக்கும் வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி வீட்டிற்கும், எனது தகப்பனார் வசிக்கும் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் தொலைவு இருக்கும். 1ம் பிரதிவாதி வசிக்கும் வீடு அவருடையதா என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதியின் கணவர் பெயர் அரசப்பன் என்றால் சரிதான். அவர்தான் எனது மற்றொரு அத்தையான சீரங்காயி என்பவரையும் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது அத்தைகள் இருவரும் தனித்தனியாக வசித்து தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். ராசு என்கிற ஆண்டியப்பன் 1ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை விற்றுவிட்டார் என்றால் சரிதான்.

8) எனது தகப்பனார் மாணிக்கம் பழனியப்பனுக்கு செத்துக்களை விற்றுவிட்டார். எனது தகப்பனார் விற்ற சொத்து யாரிடம் உள்ளது என்றால் பழனியப்பனிடம் உள்ளது. எனது தகப்பனார் விற்பனை செய்த சொத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லாத சொத்து என்றால் சரிதான். எனது தகப்பனார் விற்பனை செய்த சொத்து அவருக்கு பாகம் மூலம் கிடைத்ததா என்றால் ஆமாம். பழனியப்பன் இறந்துவிட்டார். எனது தகப்பனார் கிரையம் செய்த ஆவணத்தில் நகல் உள்ளதா என்றால் உள்ளது.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**